

சென்னை, ஆளுநர் மாளிகையில், நேற்று (21.7.2025) சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட நீதியரசர் மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா அவர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.




சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கத்தில் நேற்று (21.7.2025) நடைபெற்ற விழாவில், உயிர்மை பதிப்பகம் சார்பாக திருமதி. துர்கா ஸ்டாலின் எழுதிய "அவரும் நானும் பாகம் 2" நூலினை எழுத்தாளர் திருமதி. சிவசங்கரி வெளியிட, முதல் பிரதியை டாபே குழுமத்தின் தலைவர்/நிருவாக இயக்குநர் திருமதி. மல்லிகா சீனிவாசன் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், கவிஞர் மனுஷ்ய புத்திரன், பத்திரிகையாளர் திருமதி. லோகநாயகி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய மேல் முறையீட்டு ஆணையத் தலைவரும், மேனாள் நீதியரசருமான திருமதி பவானி சுப்பராயன், ஜி.ஆர்.ஜி. நிறுவனங்களின் தலைவர் முனைவர் நந்தினி ரங்கசாமி, 'உயிர்மை' இதழின் நிர்வாக ஆசிரியர் செல்வி ராமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### இராணி மேரி கல்லூரியில் 105-வது பட்டமளிப்பு விழா!

# "நான் முதல்வன்" திட்டங்களை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

## மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பேச்சு!




சென்னை, ஜூலை 22

சென்னை, இராணி மேரி கல்லூரியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நேற்று நடைபெற்ற 105வது பட்டமளிப்பு விழாவில் 1,523 மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இப்பட்டமளிப்பு விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் பேசியதாவது:-

நூற்றாண்டை கடந்து மாணவியர்களுக்கான ஒரு சிறந்த கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். உலகப் போர் தொடங்கிய 1914ஆம் ஆண்டு மதராஸ் மாகாண கவர்னர் பெண்ட்லண்ட் பிரபுவின் ஒப்புதலுடன் மேடம் டீ லா ஹே அவர்களை முதல்வராகக் கொண்டு 37 மாணவியர்களுடன் கேப்பர் இல்லம் எனும் கட்டிடத்தில் இக்கல்லூரி தொடங்கப்பட்டது. இன்று இக்கல்லூரியில் 6,000த்திற்கும் மேற்பட்ட மாணவியர்கள் பயில்கின்றனர்.

### நவீன வசதிகளுடன் கூடிய விடுதிக் கட்டடம்!

முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் இக்கல்லூரிக்கு ரூ.42 கோடியில் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிக் கட்டடம் கட்டி, அவர் கையாலேயே திறக்கப்பட்டது. மாற்றுத் திறனாளி மாணவியர்கள் பயன்பாட்டிற்கு ரூ.4 கோடியில் சாய்வுதளம் (RAMP) அமைப்பு, மின்தூக்கி வசதி மற்றும் சுமார் ரூ.2 கோடியில் தாவரவியல் பாடப்பிரிவுக் கட்டடங்கள் போன்றவைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நிறை வேற்றப்பட்டுள்ளது.

நேற்று இவ்விழாவில் 1,252 மாணவியர்கள் இளநிலை பட்டத்தினையும், 237 மாணவியர்கள் முதுநிலை பட்டத்தினையும், 34 மாணவியர்கள் M.PHIL பட்டத்தினையும் என மொத்தம் 1,523 மாணவியர்கள் பட்டம் பெறுகின்றனர். இதில் 550 மாணவியர்கள் முதல் தலைமுறை பட்டதாரிகள். இத்தகைய பின்புலம் இருக்கும் மாணவியர்கள் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று இருப்பது மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருக்கிறது. அதிலும், 100 மாணவியர்கள் பதக்கம் பெற்று விளங்குவது வெகு சிறப்பு. அவர்களிலும் மாற்றுத்திறனாளி மாணவியர்கள் 19 பேர் பட்டம் பெறுவது தனிச் சிறப்பு.

இக்கல்லூரியில் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களில் பயன்பெற்ற முதல் தலைமுறை பட்டதாரி 55 மாணவியர்கள், நான் முதல்வன் திட்டத்தில் பயன்பெற்ற மாணவியர்கள் 4,263 மற்றும் புதுமைப்பெண் திட்டத்தில் 1,824 மாணவியர்கள் பயன்பெறுகின்றனர்.

இந்தி, சமஸ்கிருதத்தை உள்ளடக்கிய மும்மொழிக் கொள்கையே புதிய கல்விக் கொள்கை. இது தமிழ்நாடு அரசின் இரு மொழிக் கொள்கைக்கு முரணானது.

தற்போதுள்ள 10+2+3 என்ற நடைமுறை மாணாக்கர்கள் எளிதாக பட்டப் படிப்புக்குச் செல்லும் முறை. இந்த கல்வி முறையை மாற்றக் கூடாதென்பதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். இதை எதிர்ப்பதில் இந்தியாவிலேயே இன்று தமிழ்நாடு மட்டும்தான் முன்னணியில் நிற்கிறது.

### மாணவர்கள் – நான் முதல்வன் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

நமது முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வியில் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களுக்குச் சிறிதும் அஞ்சாமல், போராடி வருகிறார். மாணாக்கர்கள் அரசின் "நான் முதல்வன்" போன்ற திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 'நான் முதல்வன்' திட்டம் மாணாக்கர்களுக்கு எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தரும். அதைத்தான் நம் முதல்வர் அவர்கள் மாணாக்கர்களிடம் விதைத்திட அறிவுறுத்தியுள்ளார்.

இன்று பட்டங்களை பெறும் மாணவியர்களாகிய நீங்கள் இதுவரை ஒரு மாணவி என்ற நிலையில் படிக்கும் இடம் சார்ந்தும் உங்களின் பெற்றோரைச் சார்ந்தும் இருந்திருப்பீர்கள். ஆனால், இன்று முதல் உங்கள் ஒவ்வொருவரையும் தனித் தனி மனிதராக இந்தச் சமூகம் பார்க்கப் போகின்றது. இந்தச் சமுதாயத்தில் எந்த உயரத்தை எட்ட வேண்டுமோ அதை உங்களின் செயல்களால் நீங்கள் பெற்றுக் கொள்கிற நேரம் வந்துவிட்டது. அதற்கான அடையாளம் தான் இன்று நீங்கள் பெறும் பட்டம். எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு பயணம் செய்யுங்கள். நிறைந்த புகழையும், வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் நீங்கள் பெற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, கல்லூரி முதல்வர் முனைவர் பா. உமாமகேஸ்வரி, பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (21.07.2025) சென்னை, கொளத்தூர், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு தொடக்க விழாவில் அக்கல்லூரிக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள 11 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, முனைவர் கோவி.செழியன், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார். மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், அறங்காவலர் குழுத் தலைவர் பி. விஜயகுமார் ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்தில் – நாளை

# முத்தமிழறிஞர் கலைஞர் மார்பளவு வெண்கலச் சிலை - நலத்திட்ட உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர், ஜூலை 22

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் தி.மு.க. சார்பில் நாளை (23.07.2025 புதன்கிழமை) மாலை 4 மணி அளவில் பாரிவாக்கம், சென்னேரி குப்பத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மார்பளவு வெண்கலச் சிலையயை திறந்து வைத்து 100 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், கலைஞர் நூலகம் திறப்பு விழா, 72 அடி உயர கழகக் கொடியேற்றுதல், 50 பெண்களுக்கு சலவை இயந்திரம், 100 பெண்களுக்கு தையல் இயந்திரம், 750 பெண்களுக்கு மிக்சிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழா மாவட்ட கழகச் செயலாளர் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எனது தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முன்னிலை வகிக்கிறார். ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் எம். முத்தமிழ் செல்வன், வி.குமார், ஒன்றிய நிர்வாகிகள் அண்ணாமலை, ஏ.ஜனார்த்தனன், எம்.இளையான், எஸ்.புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், க.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் .

இதில் தமிழ்நாடு துணை முதல்வரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மார்பக சிலையை மற்றும் கலைஞர் நூலகம் திறந்து வைத்து பொற்கிழி மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார் . எனவே தொண்டர்கள் அனைவரும் அதிக அளவில் திரண்டு அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும் .

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மை அணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், தொகுதி பார்வையாளர்கள்

பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜ், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெய பாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ். ஜி.ராஜேந்திரன். ஜி.விமல் வர்ஷன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர்,

மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சண்.பிரகாஷ், மேயர் ஜி. உதயகுமார், டி.தேசிங்கு, ஜி.ஆர்.திருமலை, தி. வே.முனுசாமி, என்.இ.கே. மூர்த்தி, ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயணபிரசாத், பேபி சேகர் பொன்.விஜயன், தி.வை.ரவி, ஆர்.ஜெயசீலன் சே.பிரேம் ஆனந்த் த. தங்கம் முரளி, டி.முரளி கிருஷ்ணன்

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் டி.குமரேசன் என்.சண்முகம், சங்கீதாசீனிவாசன், நாகூர் கனி, ஏ.ஜி.ரவி, எ.ஜெ. பவுல், பெ.வினோத்குமார், வி.தியாகராஜன் உ.பிரவீன் குமார், ஆர்.ஆதிகேசவன் சா.சௌந்தரராஜன், விமல் ஆனந்த், எம்.மோகன், கு. தமிழ்ச்செல்வி த.குமரேசன் நிஜலிங்கம், க.ஷாஜகான், ஜி.ராஜேஷ்குமார், ஜாக்கப், வி.பார்த்திபன், பசீர்அகமது அலிகான், ஜி. துர்காபிரசாத் மற்றும் மாவட்ட அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, தேர்வு கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள். கழக இந்நாள், முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.பரிமளழகன் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு அமைச்சர் சா.மு.நாசர் அறிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் 2023 மூலம் கிடைக்கப்பெற்ற நிதி!

# ரூ.50.77 கோடி மதிப்பில் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் உயர்தர புற்றுநோய் சிகிச்சை மையம் - கூடுதல் கட்டிட கட்டுமானப் பணி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, ஜூலை 22

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் 2023 மூலம் கிடைக்கப்பெற்ற நிதி ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் சென்னை இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும் உயர்தர புற்றுநோய் சிகிச்சை மையம் மற்றும் ரூ.40.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிட கட்டுமானப் பணியினை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் கடந்த 07.08.2024 அன்று சென்னை, இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் 2023 நிகழ்ச்சியின் மூலம் கிடைக்கப்பெற்ற பதிவுத்தொகை ரூ.3,42,50,000/ மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் மூலமாக அரசு பங்களிப்பு நிதி ரூ.6,85,00,000/ ஆக மொத்தம் ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் உயர்தர புற்றுநோய் சிகிச்சை மையம் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதன் பரப்பளவு 62,700 சதுர அடி. இதில் தரைத்தளம் மற்றும் இரண்டு மாடிகள் உள்ளது. தரைத்தளத்தில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், கதிரியக்க நோய் கண்டறிதல் பிரிவு, முதல் தளத்தில் உள்நோயாளிகள் பிரிவு, இரண்டாம் தளத்தில் நவீன வசதிகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கங்கள், அறுவை சிகிச்சைக்கு முந்தைய அறை, மீட்பு அறை, தீவிர சிகிச்சை பிரிவு போன்ற வசதிகளுடன் கட்டிடம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் ரூ.40.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் மருத்துவ கட்டிடங்கள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகிறது. அந்த கட்டிடப் பணிகளை நேற்று (21.07.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.ஆயிஷா ஷாகிம் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (21.07.2025) சென்னை, இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் 2023 நிகழ்ச்சியின் மூலம் கிடைக்கப்பெற்ற பதிவுத் தொகை ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர்தர புற்றுநோய் சிகிச்சை மையம் மற்றும் ரூ.40.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடங்கள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 07.08.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் கட்டுமானப் பணிகளை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்வில் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.ஆயிஷா ஷாகிம் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.